டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 1.03.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 208 - Madurai | Online Edition

# மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் பங்கேற்பு

புது தில்லி, பிப்.28

ஜான்சியில் உள்ள ராணி லட்சுமி பாய் மத்திய வேளாண் பல்கலைக்கழகம், அதன் மூன்றாவது பட்டமளிப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் இதில் தலைமை விருந்தினராக தனது உரை நிகழ்த்தினார். அவர் 365 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கியதுடன், 15 திறமையான மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய சிவராஜ் சௌகான், 'பட்டமளிப்பு விழா என்பது கல்வியின் முடிவு அல்ல எனவும், அது தேசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகும் என்றும் கூறினார். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், இந்தியா உலகளாவிய மரியாதையைப் பெற்று வருகிறது என்றும், தற்போது இளைஞர்கள் தங்கள் அறிவு, திறன்கள், மதிப்புகள் ஆகியவை மூலம் தேசத்திற்குப் பெருமை சேர்ப்ப தாகவும் தெரிவித்தார்.

நாட்டின் உணவுப் பாதுகாப்பை எடுத்துரைத்த அவர், இப்போது இந்தியா உணவு தானியங்களுக்கு எந்த நாட்டையும் சார்ந்திருக்கவில்லை என்று கூறினார். இந்த சாதனைக்கு வேளாண் விஞ்ஞானிகள், கடினமாக உழைக்கும் விவசாயிகள் ஆகியோர் தான் காரணம் என்று அவர் கூறினார்.

ஆய்வகங்களிலிருந்து விவசாயிகளின் வயல்களுக்கு, அறிவு பயணிப்பதை உறுதி செய்யும் போது உலகின் உணவு மைய மாக இந்தியா மாறும் என்று சௌகான் தெரிவித்தார்.

# தேசிய அளவிலான அஸ்வகந்தா விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது




விழுப்புரம், பிப்.28

இந்திய அரசின், ஆயுஷ் அமைச்சகம், தேசிய மூலிகை தாவரங்கள் வாரியம் நிதி உதவியோடு, விவேகானந்தா அறக்கட்டளை ஏற்பாட்டின் படி, பாண்டிச்சேரி வேளாண் அறிவியல் கல்லூரியின் ஒருங்கிணைப்பில் தேசிய அளவிலான அஸ்வகந்தா விழிப்புணர்வு கருத்தரங்கம் தவள குப்பத்தில் உள்ள கே.வி.பி மஹாலில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கிற்கு பாண்டிச்சேரி வேளாண் அறிவியல் கல்லூரியின் தாளாளர், முனைவர் அக்ரி கணேஷ் தலைமை தாங்கி நோக்கு உரை வழங்கினார். முன்னதாக விவேகானந்தா அறக்கட்டளையின் தலைவர் முனைவர் பாலு வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில், மூத்த தலைமை மருத்துவ அதிகாரி ஸ்ரீதர், ICAR முதன்மை விஞ்ஞானி முனைவர் மணிவேல், வேளாண் துணை இயக்குனர் குமாரவேலு, புதுச்சேரி மார்க்கெட் கமிட்டியின் செயலாளர் ஜோசப் ஆல்பர்ட், ஹெர்பல் முருகன் ஆகியோர் அஸ்வகந்தாவின் சாகுபடி தொழில் நுட்பங்கள், சந்தை வாய்ப்புகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாய பெருமக்களுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். மேலும் இந்த கருத்தரங்கில் தங்கள் நிலங்களில் சாகுபடி செய்ய விருப்ப முள்ள, விவசாய பெருமக்களுக்கு அஸ்வகந்தா நாற்றுகள் வழங்கப்பட்டன. விவசாயிகளுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளும், மண்புழு உரம் மண்புழு உரநீர் விதைகள் அடங்கிய தொகுப்புகளும் வழங்கப்பட்டன.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மேலும் இந்த கருத்தரங்கில் 250க்கும் மேற்பட்ட விவசாயிகள் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கல்லூரியின் முதல்வர் முனைவர் தமிழரசன், ஆசிரியர்கள் சத்யா மணிகண்டன், நதியா மற்றும் மாணவர்கள் சிறப்பாக செய்திருந்தனர். கருத்தரங்கில் பங்கேற்ற அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், பிப்.28

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. மார்ச் 2026 மாதத்திற்கான பயிற்சி 05.03.26 வியாழக்கிழமை அன்று அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டண மான ரூ.850/ நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/- நபர் (அடையாள சான்று அவசியம்).

பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422 - 6611336, 6611226, 96294 96555, 63792 98064, மின்னஞ்சல் : pathology @tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# பயறுவகைப் பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை முறைகள்

திருச்சி, பிப்.28

திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகளுக்கு பயறுவகைப் பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை முறைகள் குறித்து வேளாண்மை இணை இயக்குநர், பூ.வசந்தா தெரிவித்துள்ளதாவது, இந்நோய் பாசிப் பயறு மஞ்சள் தேமல் நச்சுயிரி என்ற கிருமி யால் ஏற்படுகிறது. நோய் ஏற்படும் பருவத்தைப் பொருத்து விளைச்சல் இழப்பு 10 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை இருக்கும். இந்நச்சுயிரி துவரை, பச்சைப்பயறு, அவரை ஆகிய பயிர்களிலும் தோன்றும்.

### நோய் ஏற்படச் சாதகமான தட்பவெப்ப நிலைகள்

இந்நோயின் அறிகுறிகள் குளிர்ந்த காலநிலையில் அதிக அளவில் காணப்படும். வெள்ளை ஈ– யின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும் சூழலில் வைரஸ் பரவுவதற்கு மிகவும் சாதகமாக இருக்கும்.

### அறிகுறிகள்

முதலில் இளம் இலைகளில் சிறிய மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றும். இவை விரைவாக அளவில் பெரியதாகி, சிறிய மஞ்சள் நிறத்தேமல் அறிகுறிகளை உண்டாக்கும். நாளடைவில் இலைகள் முழுவதும் மஞ்சளாகி விடும். பாதிக்கப்பட்ட பயிர்கள் தாமதமாக முதிர்ச்சியடையும். குறைந்த அளவிலான பூக்கள் மற்றும் காய்களைக் கொண்டிருக்கும். காய்கள் அளவில் சிறியதாக உருமாறிக் காணப்படும். பயிரின் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தில் நோய் ஏற்பட்டால், விதைகள் உருவாகும் முன்பே செடிகள் இறந்துவிடும்.



## நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்

இந்நச்சுயிரி, வெள்ளை ஈக்கள் (பெமிசியா டெபாசி) மூலம் பரவுகிறது. இந்நச்சுயிரி, களைச் செடிகளான குரோடான் ஸ்பார் சிப்ளோரஸ் (இரயில் பூண்டு), அகாலிபா இண்டிகா (துத்தி), எக்லிப்டா ஆல்பா (கரிசலாங்கண்ணி) மற்றும் இதரப் பயறு வகைக் குடும்பத்தைச் சார்ந்த பயிர்களில் தங்கி வாழும் தன்மையுடையது.

## மேலாண்மை முறைகள்

தேமல் நோய் பாதிக்கப்பட்ட செடிகளை விதைத்த 45 நாட்கள் வரை அகற்ற வேண்டும். அதிகமான விதையளவு (25 கிலோ / எக்டர்) உபயோகிப்பதன் மூலம் பயிர்களின் எண்ணிக்கைக் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம். களைச் செடிகளை அகற்ற வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியுள்ள உளுந்து (வம்பன் 8, 10, கோ7 மற்றும் ஏடிடி 7) மற்றும் பாசிப்பயறு (வம்பன் 5, கோ 8 மற்றும் கோ 9) இரகங்களைப் பயிர் செய்யலாம்.

கோடைக்காலத்தில் அதிகத் தாக்குதல் இருப்பதால், ராபி பருவத்தில் பயிர் செய்யலாம். கலப்புப் பயிராக உளுந்து அல்லது பாசிப்பயறுப் பயிர்களுக்கிடையில் ஒவ்வொரு 15 வரிசைக்கு இடையில் இரண்டு வரிசை மக்காச்சோளம் (60 x 30 செ.மீ) அல்லது சோளம் (45 x 15 செ.மீ.) அல்லது கம்பு (45 x 15 செ.மீ) பயிரை சாகுபடி செய்யலாம்.

மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை (12 எண்ணிக்கை / எக்டர்) பயன்படுத்தி வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தலாம். விதைகளைத் தயாமீதாக்ஷம் 25டபுள்யு.ஜி அல்லது இமிடாகுளோபிரிட் 70 டபிள்யு.எஸ் (4.0 கிராம் / கிலோ) பூச்சிக்கொல்லிகளைக் கொண்டு விதை நேர்த்திச் செய்ய வேண்டும்.

நோயைப் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த, தயாமீதாக்ஷம் 25 டபிள்யு. ஜி (100 கிராம் / எக்டர்) அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எஸ் (100 மி.லி. / எக்டர்) அல்லது மீதைல் டெமடான் (2.0 மி.லி. /லிட்டர்) அல்லது டைமீத்தோயேட் (20 மி.லி./லிட்டர்) தெளிக்கலாம் என திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர், பூ.வசந்தா தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தென்னை டானிக் முக்கியத்துவத்தை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



சிவகங்கை, பிப்.28

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், முள்ளிக்குண்டு கிராமத்தில் 27/02/26 அன்று வேளாண் மாணவிகளின் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக் பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தென்னை டானிக் வேர் ஊட்டமளித்தல் (TNAU Coconut tonic Root Feeding) என்பது தென்னை மரங்களின் விளைச்சலை 20% வரை அதிகரிக்கவும், குரும்பை கொட்டுதலைக் குறைக்கவும் வேர் வழியாக ஊட்டச்சத்துக்களை வழங்கும் ஒரு முறையாகும்.

6 மாதங்களுக்கு ஒரு முறை 200 மி.லி டானிக்கை ஆரோக்கியமான வேர் மூலம் கொடுப்பதன் மூலம், காய்கள் பெரிதாகி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

**வேர் ஊட்டம் அளிக்கும் முறை**

மரத்தின் அடிப்பகுதியிலிருந்து 1-1.5 மீட்டர் தொலைவில், மண்ணை மெதுவாகத் தோண்டி, ஆரோக்கியமான, நடுத்தர அளவுள்ள, வேர் நுனியில் இருக்கும் ஒரு செயல்பாட்டு வேரைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட வேரை சுமார் 10-15 செ.மீ நீளத்திற்கு வெட்டிய, அதன் நுனியைப் பகுதியை, 200 மி.லி. தென்னை டானிக்கை 300 மி.லி. தண்ணீரில் கலந்து வைத்துள்ள பாலித்தீன் பைக்குள் வைத்து, வேர் முழுவதும் டானிக்கில் மூழ்கியிருப்பதை உறுதி செய்து, காற்று புகாதவாறு பையின் வாயை கயிற்றால் கட்டி பின்னர் பையைச்

சுற்றியுள்ள மண்ணை வைத்து மூடி, வேர் பைக்குள் பாது காப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**பயன்கள்**

பச்சையம் அதிகரித்து, ஒளிச்சேர்க்கை திறன் கூடுகிறது. குரும்பைக் கொட்டுதல் குறைதல் மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தி கூடுவதுடன்,தேங்காயின் பருப்பு எடை கூடும். மேலும் வேர் ஊட்டம் கொடுத்த 45 நாட்களுக்குப் பிறகு அடுத்த அறுவடையைச் செய்ய வேண்டும் என விவசாயிகளுக்கு கூறினர்.




# மீன் மற்றும் மீன் வளப் பொருட்களின் நவீன மதிப்பு கூட்டும் தொழில்நுட்பம் மற்றும் சந்தைப் படுத்துதல் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி

நாகப்பட்டினம், பிப்.28

நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல் வளாகத்தில், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB), ஹைதராபாத் நிதி உதவி உடன் நடைபெற்ற "மீன் மற்றும் மீன் வளப் பொருட்களின் நவீன மதிப்பு கூட்டும் தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்துதல்" குறித்த ஐந்து நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி பிப்ரவரி 23.02.26 முதல் 27.02.26 வரை தொடர்ந்து நடைபெற்றது.



இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வ.செந்தில்குமார், தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இப்பயிற்சியில் சுகாதார மான முறையில் மீன்களை கையாளுதல், தமிழ்நாட்டினுடைய கடல் வளம், மீன் உணவின் ஊட்டச்சத்துக்களின் முக்கியத்துவம் மற்றும் மருத்துவ பயன்பாடுகள், மதிப்புக்கூட்டலுக்கேற்ற மீன் இனங்கள், மீனிலிருந்து தயாரிக்கப்படும் வெவ்வேறு விதமான மதிப்புகூட்டப்பட்ட பொருள்கள் மற்றும் அவற்றினுடைய சந்தை வாய்ப்புகள், மீன் உயிரி உரம் தயாரித்தல் குறித்து மீன் பதன தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஆ.மதிவாணன், தெளிவாக எடுத்துரைத்தார்.

மீன் மதிப்புக்கூட்டலுக்கேற்ற திறன் பேசி செயலிகள் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மீன்வளத் திட்டங்கள் குறித்து மீன்வள விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் யூ.ஹினோ பெர்னாண்டோ எடுத்துரைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் மீனவர் மற்றும் மீனவர் நலவாழ்வு துறை உதவி இயக்குநர், ஜெயராஜ் மத்திய மற்றும் மாநில அரசின்

நிதியுதவி திட்டங்களான PMMSY, PMFME மற்றும் இதர துறைச் சார்ந்த திட்டங்கள் குறித்து விளக்கினார். மீன் மதிப்புக்கூட்டலுக் கேற்ற Start-upகள் மற்றும் தொழில்முனைவோர் உருவாக்கம் குறித்து Shanky Foodsனுடைய உரிமையாளர் மதன்மோகன் தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இந்தப் பயிற்சியில் மீன் மற்றும் இறால் ஊறுகாய் தயாரித்தல், சுகாதாரமான முறையில் வாளை மீன், மத்தி மீனிகளிலிருந்து கருவாடு, மசாலா கருவாடு தயாரித்தல் மற்றும் மாசி கருவாடு தயாரித்தல், உடனடி உணவுப் பொருட்களான மீன் கட்லட், மீன் பஜ்ஜி, மீன் பகோடா, மீன் பர்கர், இறால் மற்றும் மீன் சூப் தயாரித்தல், மீன் பொருட்களின் நவீன பொதியுறை முறைகள், வெற்றிட பொதியுறை முறைகள் மற்றும் மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறைகள் குறித்து நிலையத்தின் மீன்பதன தொழில் நுட்ப வல்லுநர் முனைவர் ஆ.மதிவாணன், செயல்முறை விளக்கங்களுடன் தெளிவாக விளக்கினார்.

மீன் மதிப்புக் கூட்டலில் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்ககூடிய பெண் தொழில்முனைவோர் கிரிஜா தன்னுடைய வெற்றிக் கதையை பயனாளிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

இப்பயிற்சியில், சென்னை, பாண்டிச்சேரி, கடலூர், புதுக் கோட்டை, தர்மபுரி, மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்தசுமார் 25 மீனவர்கள், விவசாயிகள், பண்ணை மகளிர், கிராம இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இப்பயிற்சியின் நிறைவு விழாவில் மீன் மற்றும் மீன் வளப் பொருட்களின் நவீன மதிப்பு கூட்டும் மற்றும் சந்தைப்படுத்துதல் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் பயனாளிகள் பயன்பெறும் வகையில் புத்தகமானது வெளியிடப்பட்டது மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டுக் கொண்டிருக்கும் வெற்றிகர மான தொழில்முனைவோரான Shanky Foodsனுடைய உரிமை யாளர் மதன்மோகனுக்கு ரூபாய் 36 இலட்சம் மதிப்பிலான மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களுக்கான ஏற்றுமதி ஆணையை பெற்றதற்காக பயனாளிகள் முன்னிலையில் கௌரவிக்கப் பட்டார்.

# மக்காச்சோளத்தில் 'அமெரிக்க படைப்புழு' பூச்சி மேலாண்மைக்காக பறவை அமர்வுக் கம்பம் நிறுவல் வேளாண் கல்லூரி மாணவி செயல்முறை விளக்கம்

மதுரை, பிப்.28




மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி பேரூராட்சியில் உள்ள தி.குண்ணத்தூர் கிராமத்தில், மக்காச்சோளப் பயிரில் தாக்கம் ஏற்படுத்தும் அமெரிக்க படைப்புழு பூச்சியை கட்டுப்படுத்தும் நோக்கில் பறவை தாங்கி நிறுவும் களப்பயிற்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி மதுரை வேளாண் கல்லூரி மாணவி நவீனா ர, வேளாண்மை பணி அனுபவத்திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது.

மொத்தம் 6 விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். பூச்சி தாக்கம் மற்றும் அதன் பரவல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதுடன், இயற்கை எதிரிகளை ஊக்குவிக்கும் பறவை தாங்கிகள் எவ்வாறு பயனளிக்கின்றன என்பதும் எடுத்துரைக்கப்பட்டது. பின்னர் பறவை தாங்கிகள் அமைக்கும் முறை குறித்து நேரடி விளக்கம் வழங்கப்பட்டது. அதில் எந்த உயரத்தில் கம்பம் அமைக்க வேண்டும், எந்த இடைவெளியில் நிறுவ வேண்டும், பறவைகள் எவ்வாறு பூச்சிகளை கட்டுப்படுத்துகின்றன என்பதையும் விவரமாக விளக்கினார்.

ஒவ்வொரு ஏக்கருக்கும் 10-12 பறவை அமர்வுக் கம்பங்கள் அமைத்தால், பறவைகள் வயலுக்கு அடிக்கடி வருவதால் பூச்சி தாக்கம் குறைகிறது என கூறப்பட்டது.

விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது வயல்களில் இந்த முறையைப் பயன்படுத்தி இயற்கை வழியில் பூச்சி மேலாண்மையை மேற்கொள்வதாக தெரிவித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# ஈசல் எவ்வாறு உண்டாகிறது? தெரியுமா?

ஈசல்கள் கரையான் இனத்தை சேர்ந்தவை. இதனை ஆங்கிலத்தில் (WINGED TERMITES) கரையான் புற்றில் இருந்து ராணி கரையான் பிரத்தியேகமாக இடும் முட்டைகளில் இருந்து வெளியேறுபவையே ஈசல்கள். அவை புற்றுக்களி லிருந்து வெளியேறி புதிய புற்றுகள் உருவாக்கும். ராணி ஈசல்கள் இடும் முட்டையிலிருந்து வெளியேவரும் ஈசல் குஞ்சுகள் வெள்ளை நிறத்துடன் நான்கு இறக்கைகளுடன் இருக்கும்.

**ஈசல் எப்போது வெளியேறும்?**

ஈசல்கள் பங்குனி, சித்திரை மாதங்களில் புற்றிலுள்ள ஒரு ஜோடி ஈசல் புழுக்களால் உருவாக்கப்படுகின்றன. மழை பெய்ததும் ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் புற்றைவிட்டு வெளியேறும், ஈசல் நான்கு சிறகுகளை பெற்றிருக்கும், அந்த சிறகுகள் காற்றை எதிர் கொண்டு பறக்க இயலாது. எனவே காற்று வீசாத காலத்தில், அதிக வெயிலோ, காற்றோ இல்லாத ரம்மியமான வானிலையில் வெளியேறுகின்றன. புற்றிலிருந்து வெளியேறும் ஈசல்களில் 80% வரை பறவைகள், தவளைகள், பல்லி, ஓணான், உடும்பு போன்றவற்றுக்கு இரையாகி விடுகின்றன.

ஈசலின் ஆயுள் காலம் 12 முதல் 20 ஆண்டுகள். இனிமேல் ஈசல்கள் ஒரே நாளில் இறந்து போகும் என்று யாரவது சொன்னால் அது தவறு என்று இந்த தகவலை சொல்லுங்க என்று சிலரும், இல்லை இல்லை அது ஒரு நாள் தான் உயிர் வாழும் பூச்சி என்று பலரும் சொல்லுகிறார்கள்.

**ஈசலை சாப்பிடலாமா?**

சிறகு நீக்கி சுத்தம் செய்யப்பட்ட ஈசலை சமைத்துச் சாப்பிட லாம். ஈரம் போக நன்கு வெயிலில் உலர்த்திட வேண்டும். பின்பு கையால் தேய்த்து ஈசலின் தலை கால்களை இரு விரல்களுக்கு இடையே வைத்து நசுக்கினால் எண்ணெய் வெளியேறுவதை காணலாம்.

ஈசல் கொழுப்பும் புரதமும் நிறைந்த உணவாகும். உலர்ந்த ஈசலை அப்படியே உண்ணலாம். அல்லது நாட்டு வெல்லம் சேர்த்தும் உண்ணலாம்.

மதுரை, தேனி மாவட்டங்களில் ஈசல் அதிகமான காலங்களில் தெரு தெருவாக விற்பனை செய்யப்படுகிறது. கிலோ 200 என்று விற்பனை செய்கிறார்கள்.

**ஈசல் மருத்துவ குணமுள்ளதா?**

ஈசல் சித்த மருத்துவத்தில் 'இந்திர கோபப் பூச்சி' என்று அழைக்கப்படுகிறது. இது அதிக ஸ்டார்ச் உள்ள இடங்களில் வாழ்கிறது. இதில் செம்பு சத்து அதிகம் உள்ளது. இதனை பொரியுடன் கலந்து சாப்பிடலாம். பேதி, மூல நோய்க்கு நல்ல மருந்து, தாது வலிமையாக்க உதவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தென்னை விவசாயிகளுக்கு 'தழைக்கூளம்' முறை குறித்து செயல்முறை விளக்கம்



தேனி, பிப்.28

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவி நிரஞ்சனா கிராமத் தங்கியிருப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் கிராமத்தில் முகாமிட்டு உள்ளனர். இத்திட்டத்தின் கீழ், மாணவி நிரஞ்சனா, அப்பகுதி தென்னை விவசாயிகளுக்குப் பயன் தரும் வகையில் 'மண்ணின் ஈரப்பதம் காக்கும் மல்ச்சிங் தொழில்நுட்பம் குறித்து நேரடி செயல்முறை விளக்கம் அளித்தார். கோடைக் காலங்களில் தென்னை மரத்தைச் சுற்றியுள்ள நீர் ஆவியாவதைத் தடுத்து, ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்கவைக்கும் முறையை விளக்கினார். இந்த முகாமில் தாமரைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஏராளமான தென்னை விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். கல்லூரி மாணவிகளின் இத்தகைய களப்பணி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# பயறு ஒன்டர் தெளிப்பு செய்முறை விளக்கக்காட்சி



மதுரை, பிப்.28

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவி நந்திதா க, கிராமப்புற வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் ஒரு பகுதியாக, டி.கல்லுப் பட்டி வட்டாரம், கெஞ்சம்பட்டி பிட்-1ல் அமைந்துள்ள புளியம்பட்டி கிராமத்தில் பயிர்ச் செயலில் ஈடுபட்ட விவசாயிகளுக்காக பயறு ஒன்டர் தெளிப்பு செய்முறை விளக்கக் காட்சியை நடத்தினார்.

இந்த நிகழ்வில், பயிர்களில் மலர் உதிர்வு குறைவு, காய்கள் அதிகரிப்பு மற்றும் விளைச்சல் மேம்பாடு ஆகியவற்றை நோக்க மாகக் கொண்டு பயறு ஒன்டர் பயன்பாட்டின் முக்கியத்துவம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. பயறு ஒன்டர் என்பது தானியங்கி ஊட்டச்சத்து கலவையாகும். இது பருப்பு பயிர்களில் பூத்தல் மற்றும் காய்ப்பிடிப்பு அதிகரிக்க உதவுகிறது.

விளக்கக் காட்சியின் போது, பயறு ஒன்டர் ÷ 5 கிலோ/ஹெக்டேர் அளவில் 500 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்கும் முறையும், தெளிக்க வேண்டிய சரியான பயிர் நிலை (50% மலர்ச்சி) மற்றும் காலை அல்லது மாலை நேரங்களில் தெளிப்பதன் பயன்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இதன் மூலம் செடிகளின் உயிர்ச் சக்தி அதிகரித்து, காய்கள் சீராக உருவாகி, விளைச்சல் உயர் வதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்பதும் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த பயிற்சி மற்றும் விளக்கக்காட்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

# எருக்கு இலை கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஈரோடு, பிப்.28

ஈரோடு மாவட்டம், T.N.பாளையம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில், குமரகுரு வேளாண்மை கல்லூரி மாணவிகள் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான ‘எருக்கு இலை கரைசல்’ தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த நேரடி விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியில், இயற்கை வேளாண்மையில் முக்கிய பங்கு வகிக்கும் எருக்கு இலை கரைசல் தயாரிக்கும் முறையை மாணவர்கள் நடைமுறைமாக செய்து காட்டினர். எருக்கு இலை, பசு சிறுநீர், நீர் ஆகியவற்றை சரியான அளவில் கலந்து 7–10 நாட்கள் நிழலில் காய்ச்சி தயாரிக்கும் முறையை விவரமாக விளக்கினர். மேலும், இந்த கரைசல் பயிர்களில் பூச்சி தாக்கத்தை குறைக்கும் திறன் கொண்டது, செலவு குறைவாக தயாரிக்கலாம், மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்பதையும் எடுத்துரைத்தனர். குறிப்பாக காய்கறி மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் இதன் பயன்பாடு சிறந்த பலனை அளிக்கும் என தெரிவித்தனர்.



# சமூக வேலி அமைப்பின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



மதுரை, பிப்.28

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவி கனிகா, கிராமப் புற வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் ஒரு பகுதியாக டி.கல்லுப் பட்டி வட்டாரம், கடனேரி கிராமத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார்.

கடனேரி கிராமத்தில் பெரும்பாலும் மக்காச்சோளம் மற்றும் சோளம் பயிரிடப்படுகின்ற நிலையில், காட்டுப்பன்றி மற்றும் மான் போன்ற வனவிலங்குகளால் பயிர்களுக்கு அடிக்கடி சேதம் ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதனைத் தடுக்கும் வகையில், சமூக வேலி (Community Fencing) முறையின் முக்கியத் துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

பயிற்சியின் போது, தனிப்பட்ட வேலி அமைப்பை விட சமூக வேலி அமைப்பு எவ்வாறு செலவுக் குறைவாகவும், பயனுள்ளதாகவும் அமைகிறது என்பதையும், அனைவரும் இணைந்து செயல்பட்டால் வனவிலங்குகளின் நுழைவை திறம்பட கட்டுப்படுத்த முடியும் என்பதையும் மாணவி கனிகா தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும், செயின் வேலி (Chain fencing), சோலார் வேலி (Solar fencing), உயிர்வேலி (Live fencing) போன்ற பல்வேறு வேலி வகைகள் குறித்து விளக்கி, அவற்றின் பயன்பாடு, செலவு, நீடித்த தன்மை மற்றும் பயிர்களுக்கு ஏற்ப தேர்வு செய்யும் முறைகள் பற்றியும் விவரித்தார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் வேலி அமைப்புக்கான திட்டங்கள் மற்றும் மானி யங்கள் குறித்து விவசாயிகளுக்கு தகவல் வழங்கப்பட்டு, அவற்றை எவ்வாறு பெறுவது என்பதையும் எடுத்துரைத்தார். தனிநபர் முறையை விட சமூகமாக இணைந்து விண்ணப்பித்தால் அதிக பயன் கிடைக்கும் என்பதையும் வலியுறுத்தினார்.

பயிற்சியின் இறுதியில், விவசாயிகள் அனைவரும் ஒன்றி ணைந்து சமூக வேலி அமைப்பை நடைமுறைப்படுத்தி, தங்களது விளைநிலங்களை பாதுகாக்க முன்வர வேண்டும் என ஊக்கு விக்கப்பட்டனர். இந்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# வாழை தண்டில் வண்டு கட்டுப்பாட்டிற்கு ப்சூடோஸ்டெம் பொறி அமைப்பு செய்முறை விளக்கம்



மதுரை, பிப்.28

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்ந்த கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்லுப்பட்டி வட்டாரம், சின்னரெட்டிபட்டி கிராமத்தில் வாழை பயிரில் தாக்கம் ஏற்படுத்தும் தண்டு வண்டு கட்டுப்பாட்டிற்கான ப்சூடோஸ்டெம் பொறி அமைக்கும் முறையை விளக்கும் செய்முறை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை நான்காம் ஆண்டு வேளாண்மை மாணவி பிரியதர்ஷினி ச நடத்தினார். இதில் தண்டு வண்டு தாக்கத்தின் அறிகுறிகள், அது ஏற்படுத்தும் மகசூல் இழப்பு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் ப்சூடோஸ்டெம் பொறியின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. மேலும், வாழை அறுவடை செய்யப்பட்ட தண்டுகளைப் பயன்படுத்தி எளிய முறையில் ப்சூடோஸ்டெம் பொறி அமைப்பது குறித்து நேரடி செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

பொறி அமைக்கும் இடைவெளி, கண்காணிப்பு முறை மற்றும் பூச்சிகளை அழிக்கும் நடைமுறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இச்செய்முறை விளக்கம் மூலம் விவசாயிகள் குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான முறையில் வாழை பயிரில் தண்டு வண்டு தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான அறிவைப் பெற்றனர். இதில் சின்னரெட்டிபட்டி கிராம விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# விவசாயிகளின் கைகளில் நவீன தொழில்நுட்பம் : உழவன் செயலி குறித்த விழிப்புணர்வு பயிற்சி!

மதுரை, பிப்.28

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவி ரா. லோஹிதா, தனது கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், அம்மாப்பட்டி கிராமத்தில் 'உழவன் செயலி' குறித்த சிறப்பு விழிப்புணர்வு பயிற்சியினை நடத்தினார். இம்முகாமில், தமிழக அரசின் உழவன் செயலியை விவசாயிகள் தங்கள் கைபேசியில் எவ்வாறு பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவது என்பது குறித்து

நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. குறிப்பாக, அரசின் மானியத் திட்டங்களுக்கு விண்ணப்பித்தல், இடுபொருள் முன்பதிவு, அன்றாட சந்தை விலை நிலவரம், பயிர் காப்பீடு மற்றும் வானிலை முன்னறிவிப்பு போன்ற சேவைகளை விவசாயிகள் தங்கள் விரல் நுனியிலேயே பெறுவதன் அவசியத்தை மாணவி எடுத்துரைத்தார். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இடைத்தரகர்கள் இன்றி வேளாண் தகவல்களைப் பெறுவது குறித்து நடத்தப்பட்ட இப் பயிற்சி, அம்மாப்பட்டி கிராம விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், தங்களின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்களையும் அவர்கள் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

# பழ ஈக்களைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறி செயல்விளக்கம் : வேளாண் மாணவி தகவல்



திண்டுக்கல், பிப்.28

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவி பா.அபிராமி, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரத்திற் குட்பட்ட கொடைங்கி நாயக்கன்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்குப் பழ ஈ மேலாண்மை குறித்த செயல்விளக்கத்தை நடத்தினார்.

கொடி வகை காய்கறிப் பயிர்களான பாகல் மற்றும் புடலையில் பழ ஈக்களின் தாக்குதலால் மகசூல் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க, சுற்றுச்சூழலுக்கு உகந்த 'இனக்கவர்ச்சி பொறி' அமைக்கும் முறையை விளக்கினார். ரசாயன பூச்சிக்கொல்லிகளைத் தவிர்த்து, மிகக் குறைந்த செலவில் ஆண் ஈக்களைக் கவர்ந்து அழிப்பதன் மூலம் பயிர்களைப் பாதுகாக்கும் நுட்பத்தை விவசாயிகளுக்கு நேரடிப் பயிற்சியாக வழங்கினார்.

இந்தச் செயல்விளக்கத்தின் போது, இப்பொறிகளை வயலில் கையாளும் விதம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த துண்டுப் பிரசுரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இந்த ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் மூலம், நவீன தொழில் நுட்பங்கள் கிராமப்புற விவசாயிகளைச் சென்றடைவதை உறுதி செய்த மாணவியின் முயற்சியை ஊர் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டினர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# புத்தக விழாவில் பாராட்டி கௌரவிக்கப்பட்ட வேளாண் துறை அதிகாரி



பெரம்பலூர், பிப்.28

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற புத்தக விழாவில், வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். அவர் நூற்றுக்கணக்கான போட்டித் தேர்வுகளுக்கான புத்தகம் எழுதியுள்ளதை அறிந்து அவரை அழைத்து கௌரவித்து பாராட்டப்பட்டார். இந்நிகழ்வில் நூலகத்தின் தலைவர் மனுஷ்ய புத்திரன் வாழ்த்தினார்.

# தக்காளி இலைத் துருவல் பூச்சி மேலாண்மை NSKE தயாரிப்பு குறித்து விளக்கம் அளித்த மாணவி



மதுரை, பிப்.28

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவி மீ. குருசங்கீதா, தேனி மாவட்டம், போடி நாயக்கனூர் வட்டாரத்தில் உள்ள மேலச்சொக்கநாதபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்காக தக்காளி இலைத் துருவல் பூச்சி மேலாண்மைக்கான NSKE தயாரிப்பு தொடர்பான செய்முறை விளக்கக் காட்சியை RAWE திட்டத்தின் பகுதியாக நடத்தினார்.

நிகழ்ச்சியில், வேப்பை கொட்டைகளைத் தேர்வு செய்வது, அரைத்தல், ஊறவைத்தல், வடிகட்டுதல் ஆகியவற்றை நேரில் காட்டி, NSKE 5% பயன்படுத்துவது இலைத் துருவல் பூச்சி தாக்கத்தைக் குறைக்கும் இயற்கை, செலவுக் குறைவான மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மேலாண்மை முறை என அவர் விளக்கினார். மேலும், தெளிப்பில் பின்பற்ற வேண்டிய சரியான கலவை அளவு, தெளிப்பு நேரம் மற்றும் இடைவெளி போன்ற தகவல்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தக்காளி பயிரில் இயற்கை பூச்சி மேலாண்மை முறைகளைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டி, விளக்கத்தால் பயன் பெற்றனர்.

# பலாவில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், பிப்.28

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரம், சன்னியாசிப்பேட்டை கிராமத்தில் பலாவில் மேம்படுத்தப் பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் பற்றிய வெளிவளாக பயிற்சி 26.02.26 அன்று நடைப்பெற்றது.

இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம், திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர். க. நடராஜன் அவர்கள், துவக்கிவைத்து, தமிழ்நாட்டில் பலாசாகுபடிகுறித்தும் மற்றும் பலாவின் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக விவசாயி களுக்கு விளக்கினார். முனைவர் சு.கண்ணன் (உணவியல் துறை), பலாவில் பலாக்கொட்டை மாவு, பலா பூ, பலாக் கூழ், பலா வற்றல், பலா சிப்ஸ், பலாப் பழபார், உலர்ந்த கொட்டை, பலா உப்பு சக்கை, பலா முறுக்கு, பலா அல்வா, பலா ஜாம் போன்ற பல மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் பற்றி விரிவாக விளக்கினார். மேலும் பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் விஜய் செல்வராஜ், பலாவில் சாகுபடி குறிப்புகள், பலா பிஞ்சு உதிர்வதை தடுக்கும் முறை மற்றும் நோய் கட்டுபாடு பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். பாலூர், காய்கறி ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசரிரியர் முனைவர் கு.காயத்ரி, பலாவிற்கான இயற்கை உரங்கள் பற்றி தெளிவாக கூறினார். ஓய்வு பெற்ற இணை இயக்குநர், ஹரிதாஸ், பலாவில் மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் பலா தாய் மர பண்ணை அமைக்கும் முறை பற்றியும் தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினார். இப்பயிற்சியில் சன்னியாசிப்பேட்டை கிராமத்தை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# கொடிக்குளம் கிராமத்தில் நெல் சாகுபடி குறித்த பயிற்சி

மதுரை, பிப்.27

மதுரை வேளாண்மை கல்லூரியின் செல்லம்பட்டி RAWE குழு சார்பில், கொடிக்குளம் கிராமத்தில் நெல் சாகுபடியை திறம்பட மேற்கொள்ளும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் சுமார் 30 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

பயிற்சியின் போது SRI (System of Rice Intensification) முறை, பசுந்தழை உரம் மற்றும் பச்சைப்பயிர் உரம் (Green & Green Leaf Manuring) பயன்பாடு, உர மேலாண்மை முறைகள், மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், உரங்களின் சரியான அளவு, காலஅளவு, நீர்ப்பாசன மேலாண்மை மற்றும் முக்கிய பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த பயிற்சியில் ATMA திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் குணசேகரன் கலந்து கொண்டு விவசாயி களுக்கு வழிகாட்டுதலும் ஆலோசனைகளும் வழங்கினார். இந்நிகழ்வில் மதுரை வேளாண்மை கல்லூரி 4ஆம் ஆண்டு மாணவிகள் P.Gowsalya, B.Gomathi, K.M.Harini, M.Harini, V. Harshitha, V.Indhumathi, M.Jeevadarshini மற்றும் S.Jeevika ஆகியோர் கலந்து கொண்டு தொழில்நுட்ப பரப்புரையில் ஈடுபட்டனர். இந்த பயிற்சி மூலம் நவீன நெல் சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் விளக்கப்பட்டன.

# கொய்யா சாகுபடியில் பழ ஈக்களைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறி குறித்த செயல்விளக்கம்



மதுரை, பிப்.28

மதுரை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இறுதியாண்டு இளங் கலை வேளாண்மை பயிலும் மாணவி அ.பாலதர்ஷினி, நிலக்கோட்டை வட்டார ஒரு தட்டு கிராமத்திலுள்ள விவசாயிகளிடம் கொய்யாவில் சேதத்தை ஏற்படுத்தும் பழ ஈக்களைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறி (Pheromone Trap) பயன்பாடு குறித்த செயல்விளக்கம் அளித்தார்.

அதில், கொய்யாப் பழங்களின் உள்ளே முட்டையிட்டு புழுக்களை உண்டாக்கும் பழ ஈக்களின் ஆண் ஈக்களைக் கவர 'மித்தைல் யூஜினால்' (Methyl Eugenol) கலந்த மருந்தின் முக்கியத்துவத்தை விளக்கினார். இந்தப் பொறியை மரத்தின் நிழல் பாங்கான கிளையில் தரையிலிருந்து சுமார் 5 அடி உயரத்தில் கட்ட வேண்டும் என்று கூறினார். இப்பொறியில் உள்ள இனக்கவர்ச்சி வாசனை யால் ஈர்க்கப்படும் ஆண் ஈக்கள், பொறியின் உள்ளே விழுந்து மடியும். இதனால் ஈக்களின் இனப்பெருக்கம் தடுக்கப்பட்டு, பழங்கள் புழுக்களால் அழுகுவது தவிர்க்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 5 முதல் 10 பொறிகள் வைப்பதன் மூலம் ரசாயன மருந்துகள் இன்றி இயற்கை முறையில் மகசூலை அதிகரிக்கலாம் என்று எடுத்துரைத் தார். இப்பயிற்சியின் இறுதியில் விவசாயிகளுக்கு இது குறித்த துண்டுப்பிரசுரங்கள் வழங்கி சந்தேகங்களுக்கு பதிலளிக்கப்பட்டது.

## காண்டாமிருக வண்டை கட்டுபடுத்தும் முறை குறித்து செயல் விளக்கம்



கோயம்புத்தூர், பிப்.28

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பயிலும் இறுதியாண்டு மாண வர்கள் ஊஞ்சவேலம்பட்டியில் உள்ள விவசாயிகளுக்கு காண்டாமிருக வண்டை கட்டுபடுத்தும் முறை குறித்து செயல் விளக்கம் அளித்தனர். ரைனோலூர் (Rhinolure) என்பது தென்னை மரங்களைத் தாக்கும் காண்டாமிருக வண்டு களை கவர்ந்து அழிக்கும் ஒரு இனக்கவர்ச்சிப் பொறி ஆகும். இது தென்னை விவசாயத்தில் வண்டுகளைக் கட்டுப்படுத்தவும், மகசூல் இழப்பைத் தடுக்கவும் பயன்படும் ஒரு பயனுள்ள முறையாகும்.

**செயல்பாடு :** இது காண்டாமிருக வண்டுகளின் ஆண் இனத்தை ஈர்க்கும் வாசனைப் பொருளை பயன்படுத்தி அவற்றை பொறியில் விழச் செய்கிறது.

**பரிந்துரை :** தென்னை தோப்புகளில் ஒரு எக்டருக்கு 1 பொறி அமைக்க வேண்டும்.

**பயன்கள் :** இது இனப்பெருக்க சுழற்சியை உடைத்து, வண்டு களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைக்கிறது.

**நிர்வாகம் :** இது தென்னை மரத்தின் உச்சியில் ஏற்படும் பாதிப்பு ளைக் குறைத்து, நீண்ட காலப் பாதுகாப்பை வழங்குகிறது.

காண்டாமிருக வண்டுகளின் பாதிப்பு அதிகமாக உள்ள காலங் களில், இந்த இனக்கவர்ச்சி பொறிகளைப் பயன்படுத்துவது சிறந்த தீர்வாகும். மாணவர்கள் பொறிகள் அமைத்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

# வாழை சிறப்பு சாகுபடி முறைகளில் ஊடுபயிர் சாகுபடி

வாழை சிறப்பு சாகுபடி முறைகளில், ஊடுபயிர் சாகுபடி (கொள், தட்டப்பயறு போன்றவற்றை) செய்து உரம் மற்றும் நீர் செலவைக் குறைப்பது, திசு வளர்ப்பு மூலம் ஒரே மாதிரியான தரமான நாற்றுகளைப் பெறுவது, மண்ணின் தரத்தை ஆய்வு செய்து, நல்ல வடிகால் வசதி உள்ள இடத்தில் பயிர் செய்வது மற்றும் குறிப்பிட்ட இரகங்களை (எ.கா. ஏற்றுமதிக்கு 'காவன்டிஷ்', மலைப் பகுதிக்கு 'விருப்பாட்சி') தேர்ந்தெடுப்பது ஆகியவை அடங்கும். மேலும், வாழை சாகுபடியில் இலைப்புள்ளி மற்றும் வைரஸ் நோய்களை எதிர்க்கும் வகைகளைத் தேர்ந்தெடுப்பதும் முக்கியம்.

**முக்கிய சிறப்பு சாகுபடி நுட்பங்கள் (Special Horticulture Practices in Banana)**

**ஊடுபயிர் சாகுபடி (Intercropping)**

வாழை வரிசைகளுக்கு இடையில் தட்டப்பயறு, கொள் போன்றவற்றை பயிர் செய்வதன் மூலம் உரம், களை எடுக்கும் செலவுகளைக் குறைக்கலாம். முதல் ஆறு மாதங்களுக்குள் இதைச் செய்யலாம்.

**திசு வளர்ப்பு (Tissue Culture)**

தரமான, ஒரே மாதிரியான வளர்ச்சி மற்றும் மகசூல் தரும் நாற்றுகளைப் பெற திசு வளர்ப்பு முறை உதவுகிறது.

**மண் மற்றும் நீர் மேலாண்மை (Soil and Water Management)**

நல்ல வடிகால் வசதி, போதுமான ஈரப்பதம் மற்றும் வளம் கொண்ட மண்ணைத் தேர்ந்தெடுப்பது அவசியம்.

**இரகத் தேர்வு (Variety Selection)**

**ஏற்றுமதிக்கு :** காவன்டிஷ் (Cavendish) இரகங்கள்.

**பழமாகப் பயன்படுத்த :** மொந்தன், நேந்திரன், வயல் வாழை.

**மலைப் பகுதிகளுக்கு :** விருப்பாட்சி, சிறுமலை, செவ்வாழை போன்ற இரகங்கள்.

**நோய்த் தடுப்பு (Disease Prevention)**

இலைப்புள்ளி மற்றும் வைரஸ் நோய்களை எதிர்க்கும் பச்சை நாடன் போன்ற இரகங்களைப் பயன்படுத்தலாம்.

**அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை (Post-Harvest Management)**

வாழைத்தார் அறுவடை செய்யும் போது, மரத்தை வெட்டி தாரை எடுக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது அதிக மகசூலுக்கு உதவும்.

மேலும் விவரங்களுக்கு, ம.மதுமாறன், இளங்கலை வேளாண் மாணவன் மற்றும் முனைவர் B.குணா, இணைப்பேராசிரியர், துறைத் தலைவர் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர், முனைவர் B.கனகராஜ், இணைப்பேராசிரியர், துறைத்தலைவர் மற்றும் குழு மேற்பார்வையாளர். R.சிங்காரவேல், உதவிப்பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி.1 மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# சிறுதானியங்கள் திருவிழாவில் பையூர் தோட்டகலை மாணவிகள் பங்கேற்பு



சேலம், பிப்.28

சேலம் மாவட்டம், பெத்தநாயகன் பாளையம் வட்டம், பையூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு இளங்கலை தோட்டக்கலை பயிலும் மாணவிகள், வைத்தியக்கவுண்டன்புதூரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறுதானியகள் திருவிழாவில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இத்திருவிழாவில் மேம்பட்ட சிறுதானிய விதை ரகங்கள், நவீன விவசாய தொழில்நுட்பங்கள், பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

மாணவிகள் செய்முறை விளக்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு தரமான விதைத்தேர்வு, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை, மேலும் அதிக விளைச்சல் பெற உதவும் தொழில்நுட்பங்கள் குறித்து

தெளிவான விளக்கங்களை வழங்கினர். அதனுடன், உற்பத்திச் செலவைக் குறைத்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நடைமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சிகளை பார்வையிட்டார் மற்றும் மாணவிகளின் செய்முறை விளக்கங்களை பாராட்டினார். பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, வழங்கப்பட்ட தகவல்களைப் பயனுள்ளதாகக் கொண்டனர்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பும் இயற்கை வேளாண்மையும் களத்தில் கற்ற மாணவர்கள்



கடலூர், பிப்.28

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் வேளாண் புலத்தின் 4ஆம் ஆண்டு இளங்கலை வேளாண்மை JK Batch மாணவர்கள், ELAGR 401 - வேளாண் கழிவு மேலாண்மை மற்றும் ELAGR 402 - இயற்கை உற்பத்தி தொழில்நுட்பம் (அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக அண்ணாமலை நகர் பேரூராட்சியின் திடக்கழிவு மேலாண்மை மையத்துக்கு கல்விசார் பயணம் மேற்கொண்டனர்.

உழவியல் துறை தலைவர் முனைவர் சுந்தரி மற்றும் உதவி பேராசிரியர் முனைவர் கிருஷ்ணமூர்த்தியின் வழிகாட்டுதலின்படி, மாணவர்கள் பேரூராட்சியில் நடைமுறையில் செயல்படுத்தப்படும் வின்ட்ரோ (Windrow) முறையில் மக்கும் கழிவுகளை கம்போஸ்ட் தயாரிக்கும் செயல்முறைகளை நேரடியாகக் கற்றறிந்தனர். இந்த நிகழ்வில் உதவி பேராசிரியர் முனைவர் R.கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுகாதார ஆய்வாளர் துரைராஜ் ஆகியோர், கழிவுகளைப் பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளின் தன்மைகள், உயிரிசைவு திறன் மற்றும் கழிவுகளில் இருந்து தரமான உரம் தயாரிக்கும் முறைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தனர்.

தகவல் : நிதிஷ் குமார் க, IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**